1974 சனவரி 24]

சிறுகளத்தூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்

*150 வின.—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், சிறுகளத்தூர் கிராமத்தில் நடத்தப்பட்டு வந்த கூட்டுறவு பால் விநியோக சங்கம் நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

(உ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) மத்திய வங்கிக் கடனில் தவணை கடந்த பாக்கி நிற்பதால், புதிய கடன்கள் பெற்று சங்க அங்கத்தினர்கட்கு கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்க முடியவில்லை. அதனல் பால் உற்பத்தியை மறுபடியும் ஆரம்பித்து சங்கத்தைச் செயல்படுத்த இயலவில்லை.

(உ) நிர்வாகக் குழுவினரை மாற்றியமைத்து புதிய அங்கத்தினர்களைச் சேர்த்து நட்டத்தை சீர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்து, சங்கம் செவ்வனே செயல்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. சதாசிவம்: அந்தப் பால் சொசைடியில் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்குப் பால் வழங்கியதற்கான கிரயம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குரிய பாக்கித் தொகையும் வசூல் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அந்தச் சங்கத்தின் கணக்கின்படி ரூ. 6,500 செலுத்த வேண்டியுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தின் முன்னுள் தலைவர் மற்றும் சம்பந்தப்

பட்ட உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்தத் தொகையை வசூல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25-ம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிப்பது என்று நாம் முன்பு முடிவு எடுத்து இருந்தோம். அதை 28-ம் தேதி என்று வைத்துக் கொண்டு, இன்றும், நாளையும் விவாதம் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 28-ம் தேதியன்று எடுத்துக் கொள்வதாக இருந்த அரசினர் அலுவல்கள் 29-ம் தேதியன்றும், 29-ம் தேதியன்று எடுத்துக்கொள்வதாக இருந்த தனியார் அலுவல்கள் 30-ம் தேதியன்றும் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையின் பேரில் நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய கட்சியின் சார்பில் சில திருத்தங்களை நாங்கள் கொடுத்து இருக்கிறோம். அந்தத் திருத்தங்களிலே ஓரளவிற்கு எந்தப் பிரச்சினைகளில் எல்லாம் நாங்கள் வேறுபட்டு இருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அதே நேரத்தில் பொதுவாகப் பேசுகின்றபோது கவர்னர் பெருமானின் பேருரை ஆட்சியாளர்கள் இனி செய்யப் போகும் காரியங்களைப் பற்றியும், கடைப்பிடிக்க இருக்கின்ற கொள்கைகளைப் பற்றியும் கோடிட்டுக் காட்ட வேண்டிய அளவில் இருக்க